# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No. 138 of 2017 [L.W.55]

Prosecution Witness No.31

| | | | |
|---|---|---|---|
| Name | : **மருத்துவர் சேரலாதன்** | Caste | : BC |
| Father's Name | : Senguttuvan | Calling | : Assistant Professor Orthopaedics, MMC & RGGGH |
| Village | : Chennai | Religion | : Hindu |
| Taluk | : Chennai | Age | : 44 years |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05.02.2025.

(A1 absent. His absence condoned u/s 317 of Cr.P.C. petition filed and allowed. A2 to A6 present)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.40 மணி**

நான் தற்போது இராஜீவ் காந்தி பொது மருத்துவமனை மற்றும் சென்னை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் முடநீக்கியல் துறையில் உதவி பேராசிரியாக பணியாற்றி வருகிறேன்.

கடந்த 24.06.2015 அன்று வேலூரில் உள்ள அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவமனையில் முடநீக்கியல் துறையில் உதவி பேராசிரியராக பணியாற்றினேன். அப்போது ஷமீல்பாஷா என்ற 26 வயதுடைய ஆண் 22.06.2015 அன்று உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். 24.06.2015 அன்று என்னுடைய 24 மணி நேர பணி நேரத்தில் அவர் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்தார்.

பணியில் இருந்த நான் அவரை பரிசோதித்தபோது முழு சுயநினைவோடு இருந்தார். முக்கியமான பாதிப்பாக அவரின் இரண்டு கைகளும் வலுவிழந்திருந்தது. அதன் காரணத்தை கண்டறிய ஏற்கனவே எம்ஆர்ஐ ஸ்கேன் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அந்த ரிப்போர்ட் நான் நோயாளியை பரிசோதிக்கும் வரை வரவில்லை.

மேற்கொண்டு அவரக்கு ஏற்கனவே செய்த வந்த சிகிச்சை தொடருங்கள் என்று சொல்லிவிட்டு case sheet-ல் நான் குறிப்பு எழுதினேன். case sheet-ல் இரண்டு கைகளிலும் வலுவிழந்து காணப்பட்டது. வலது கையை தூக்க இயலவில்லை. வலது கையில் அதிகமான பாதிப்பு இருந்தது.

இடது கையை தூக்க முடிந்தது. இரண்டு கைகளிலும் முழுமையான வலு இல்லை. ஸ்கேன் ரிபோர்ட் வரவேண்டும் என்று எழுதினேன். நான் எழுதிய குறிப்பு அடங்கிய ஆவணம் அ.த.சா.ஆ.52. அது ஒரு தாள் அடங்கியது. 30.07.2015 அன்று சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சியின் குறுக்கு விசாரணை 1ம் எதிரியின் வழக்கறிஞர் வருவதற்கு சற்று காலதாமதம் ஆவதால் ஒத்திவைக்கப்படுகிறது.

நேரம் மாலை 03.00 மணி

**குறுக்கு விசாரணை**

**நேரம் மாலை 03.16 மணி**

**1 வது எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.த.சா.ஆ.52-ல் நான் எழுதிய குறிப்புகள் உள்ளன. 24.06.2015 அன்று நான் அதில் எழுதியுள்ளேன். அ.த.சா.ஆ.52 ல் நான் கையெழுத்திட்ட பகுதியில் என்னுடைய முழு பெயரை எழுதவேண்டும் என்றால் மேலே என்னுடைய பெயரை எழுதிவிட்டதால் கீழே எழுதவில்லை. நான் எழுதியதில் பல்ஸ் தொடர்பாக தனியாக குறிக்கவில்லை.

வைடல்ஸ் விவரங்களை தான் நான் குறித்தேன். பொதுவாக ஒரு நோயாளிக்கு காயங்கள் இருந்தால் அவருடைய இரத்த அழுத்தம் மற்றும் பல்ஸ் அதிகாமாக காணப்படும். அ.த.சா.ஆ.52 ல் இரண்டு பாதிப்புகள் இருக்கலாம் எனக்கு முன்பு பரிசோதித்த மருத்துவர் எழுதியுள்ளார். முதல் பாதிப்பு பிரேகியல் பிளக்ஸ இன்ஜீயூரி இரண்டு கைகளிலும் இருக்கலாம்.

இரண்டாவது சர்வைகல் மைலோபதி பாதிப்பு இருக்கலாம் என்று எழுதியுள்ளார். இதை உறதிபடுத்த எம்ஆர் ஸ்கேன் எடுக்க வேண்டும் என்று முன்கூட்டியே பரிந்துரைத்திருந்தார். பொதுவாக ஒரு நோயாளி 4 நாட்கள் சிகிச்சையில் கண்காணிப்பில் இருந்து உடனடியாக அவர் மோசமான நிலைக்கு செல்ல முடியுமா என்றால் முடியும்.

அவ்வாறான சூழ்நிலையில் Life support treatment தேவைப்படுமா என்றால் தேவைப்படும். நான் நோயாளியை காயங்களை கண்டேனா

என்றால் நான் முழுமையாக பரிசோதிக்கவில்லை. முன்பு பாத்தார்கள்நான் அதை குறிப்பு எடுத்துக்கொண்டேன். சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தபோது நான் கூறியவற்றை அவர்கள் எழுதிக்கொண்டார்கள்.

சிபிசிஐடி போலீசார் என்னை மருத்துவமனையில் விசாரித்தார்கள். என்னை விசாரிக்க சுமார் 2 மணி நேரம் விசாரித்தார்களா என்றால் சுமார் 15 நிமிடம் விசாரித்தார்கள். விசாரித்து எழுதியதில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் நான் கையெழுத்து போட்டேனா என்ற எனக்கு நனைவில்லை.

சிபிசிஐடி போலீசாரிடம் வாக்குமூலத்தில் சொன்னதை தவறி மற்ற எந்த சிகிச்சையும் நோயாளிக்கு அளிக்கவில்லை. சிபிசிஐடி போலீசாரிடம் நான் சொல்லாத விவரங்களை நான் சிபிசிஐடி போலீசார் சொல்லி கொடுத்ததை அ.த.சா.ஆ.52 ஐ நான் எழுதவில்லை என்றாலும் அது போலீசாரால் எழுதப்பட்டது என்றாலும் சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1ம் எதிரியின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.

**5 மற்றும் 6ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1ம் எதிரியின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார். மீண்டும் தொடர் குறுக்கு விசாரணை

நான் உதவி பேராசிரியாக பணியாற்றினேன். Patient care, Research Oriented, treatment ஆகியவற்றை பார்ப்பது என்னுடைய பணி. மருத்துவ

மாணவர்களுக்கு செய்முறையாக அதை கற்றுதரவேண்டும். முடநீக்கியல் துறைக்க நாங்கள் தான் மருத்துவர். அதற்கென்ற தனியாக பணி மருத்துவர் இல்லை. நாங்களே பார்த்துக்கொள்வோம். நான் எலும்பு முறிவு பிரிவில் வேலை செய்கிறேன். நரம்பு முறுவு துறையில் இல்லை.

நரம்பு மற்றும் எலும்பு தொடர்பான பாதிப்புகளை அந்தந்த மருத்துவர்கள் சொல்வார்கள் என் துறை சம்பந்தப்பட்ட மருத்துவத்தை நான் பார்ப்பேன். நோயாளியை அவருக்குள்ள பாதிப்புகளை பொறுத்து அந்தந்த துறைக்கு அனுப்புவார்கள். அதுவரை அவர் பொதுப்பிரிவில் இருப்பார். நோயாளிக்கான சிறப்பு பாதிப்பை கண்டறிந்து ஒரு ஒரு துறைக்கான சிறப்பு மருத்துவரின் சிகிச்சைக்கு அனுப்புவார்கள்.

நோயாளிக்கு எம்ஆர்ஜ ஸ்கேன் எடுக்க வேண்டும் என்று முன்பு பார்த்த மருத்துவர் எழுதினார் கடந்த 24.6.2015 அன்று நான் நோயாளியை பார்த்தபோது அவரின் பாதிப்புகளை Case sheet ல் நான் எழுதினேன். ஒரு நோயாளிக்கு தனியாக Case sheet இல்லை.

ஒரேஒரு Case sheet தான் அதில் மருததுவர் பார்த்து அதில் நோயக்கான சிகிச்சையை எழுதுவார். நோயாளியை முடநீக்கியல் துறைக்கு அனுப்பவில்லை. நோயாளியை டுரோமா வார்டடில் இருந்தார். நாங்கள் அங்கு சென்று பரிசோதித்து அவர் குறித்த காயங்களை எழுதினோம். விபத்து சிகிச்சை பிரிவு, டுரோமா வார்டு ஆகியவை சற்று வேறுபட்ட விஷயங்கள் அடங்கியது என்றால் சரியல்ல

சிபிசிஜடி போலிசாரிடம் நான் நோயாளி விபத்து சிகிச்சை பிரிவில் இருந்தார் என்று கூறியுள்ளேன்.

நோயாளியின் கை வலுவிழந்திருந்தது என்பதை அவரை பரிசோதித்து பார்த்த பின் தான் எழுதினன். நோயாளியை நான் பரிசோதித்த நேரம் வரை அவரின் எம்ஆர்ஜ ஸ்கேன் வரவில்லை. நோயாளியின் முந்தைய மருத்துவ குறிப்புகள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் நோயாளியை பார்த்தபோது என்னுடன் இருந்த மற்ற மருத்துவர்கள் பெயர் எனக்கு நினைவில்லை.

24.06.2015 அன்று மட்டும்தான் வழக்கில் சம்பந்தப்பட்ட நபரை நான் பார்த்தேன். சிபிசிஐடி அபோலீசாரிடம் நோயாளியின் குறிப்பிட்ட காயம் எதையும் சொல்லவில்லை. நீதிமனற்த்தில் கூறியுள்ள விஷயங்களை நான் போலீசாரிடம் கூறிவில்லை என்றால் சரியல்ல. போலீசார் என்ன பாதிப்பு என்று கேட்டார் இரண்டு கைகளிலும் பாதிப்பு என்று சொன்னேன். அ.த.சா.ஆ.52 ல் 23.06.2015 என்று எழுதி அது 24.06.2015 என திருத்தப்பட்டுள்ளது என்றால் அதை நான் எழுதவில்லை அது பற்றி எனக்கு தெரியாது.

அ.த.சா.ஆ.52 ல் 23.06.2015 என்று எழுதி அது 24.06.2015 என திருத்தப்பட்டுள்ளது என்பதை நான் பார்த்தும் அதை இல்லை என்பது சொல்வது பொய் சாட்சியம் அளிப்பது என்றால் அதை நான் எழுதவில்லை. அந்த ஆவண்த்தில் முதல் பகுதியில்வேறொரு மருத்துவர் எழுதியுள்ளாரி.

நான் எழுதியதற்கும் வேறொருவர் எழுதியதற்கும் வித்தியாசம் உள்ளது. அ.த.சா.ஆ.52 ல் இரண்டாவது பகுதியில் கீழ் பாதியில் நான் எழுதியுள்ளேன். அந்த ஆவணத்தில் 2 வது பக்கத்தில் attested செய்தது யார் என்று எனக்கு தெரியாது.

அதில் முத்திரை இல்லை சரி மற்றும் கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல. நான் கையெழுத்திட்ட இடத்தில் முத்திரை எழுதவில்லை. என்னுடைய எழுத்தை பெரிய எழுத்தில் எழுதவில்லை. நரம்பியல் துறை மருத்துவர் அ.த.சா.ஆ.52 ல் எழுதியுள்ளார் என்றால் சரிதான்.

அ.த.சா.ஆ.52 ல் முதல் பக்கத்தில் நரம்பியல் மருத்துவர் எழுதியதில் 23.06.2015 என்று தேதி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தை போலிசார் 23.06.2015 என்று எழுதிவிட்டார்கள் பின்னிட்டு அது 24.06.2015 என்று மாற்றி எழுதி திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் 2 வது பக்கத்தில் To be reviewed MRI-C-Spine என்று எழுதி கையெபாப்பம் போட்டது யார் அதை எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது.

அ.த.சா.ஆ.52 ல் 2 வது பக்கத்தில் நரம்பியல் மருததுவர் எழுதிய கையெழுத்துக்கும் எம்ஆர் ஸ்கேன் என எழுதியுள்ள கையெழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். அ.த.சா.ஆ.52 ல் 2 வது பக்கத்தில் நான் எழுதிய மருத்துவ குறிப்புகளை சிபிசிஐடி போலீசாரிடம் குறிப்பிட்டு சொன்னேனா என்றால் இல்லை பொதுவாக சொன்னேன்.

24.06.2015 அன்று என்னை தவிற மற்ற மருத்துவர்கள் அங்கு இல்லை என்றால் சரியல்ல. பணியில் மற்ற மருத்துவர்கள் இருப்பார்கள். அவர்கள் பெயர் ஞாபகமில்லை. 23.06.2015 அன்ற யார் பணியில் இருந்தார்கள் என்றால் அவர்கள் பெயர் தெரியாது. அ.த.சா.ஆ.52 ஐ டுரோமா வார்டடில் உள்ள பணி மருத்துவர் மட்டும்

தான் பராமரிப்பார் என்றால் சரிதான். நோயாளியை என்னுடைய துறைக்கு பரிந்துரைக்கும்பட்சத்தில் மட்டுமே அங்குள்ள நோயாளியின் Case sheet-ஐ பராமரிப்போம். அ.த.சா.ஆ.52 23.06.2015 தேதியில் எழுதப்பட்டு பின்னிட்டு 24.06.2015 அன்று சிபிசிஐடி போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் சில குறிப்புகள் எழுதி கொடுத்தேன் என்றும் அந்த ஆவணத்தை தயாரித்த பணி மருத்துவர் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

நோயாளி டுரோமா வார்டில் தான் இருந்தார். எங்கள் துறைக்கு பரிந்துரைக்கவில்லை. நான் நோயாளியை பாரத்து அவரின் குறைகளை அறிந்து அவரை எம்ஆர்ஐ ஸ்கேனுக்கு பரிந்துரைத்தேன். நான் நீதிமன்றத்தில் உண்மைக்கு மாறான பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 04.11 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.06 10:34:24 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No. 138 of 2017 [L.W.56]

Prosecution Witness No.32

| | | | |
|---|---|---|---|
| Name | : மருத்துவர் டீ.ரம்யா | Caste | : Vishwakarma |
| Father's Name: | Mr.G.Lakshmi Narasimhan | Calling | : Consultant Neuro Surgeon, Private Hosp, Vellore |
| Village | : | Religion | : Hindu |
| Taluk | : Vellore | Age | : 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05.02.2025.

(A1 absent. His absence condoned u/s 317 of Cr.P.C. petition filed and allowed. A2 to A6 present)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் மாலை 03.00 மணி**

நான் தற்போது தனியார் மருத்துவமனையில் நரம்பியல் துறையில் மருத்துவராக உள்ளேன். நான் அரசு பணியை இரண்டு வருடத்திற்கு முன்பு இராஜினாமா செய்துவிட்டு தற்போது நரம்பியல் அறுவை சிகிச்சை மருத்துவராக உள்ளேன். நான் வேலூர் அரசு மருத்துவ மனையில் 2015-ல் நரம்பியல் அறுவை சிகிச்சை மருத்துவராக இருந்தபோது ஷமீல் பாஷா என்பவருக்கு 23.06.2015 அன்று நோயாளியை பார்த்தேன்.

மருத்துவர் சேரலாதன் நோயாளியை பார்ப்பதற்கு முன்னர் மற்றும் பின்னர் நான் நோயாளியை 23.06.2015, 24.06.2015 மற்றம் 25.06.2015 ஆகிய தினங்களில் பார்த்தேன். 23.06.2015 அன்று நான் நோயாளியை பார்த்தபோது அவர் முழு சுயநினைவுடன் இருந்தார்.

இரண்டு கைகளும் வலுவிழந்திருந்தது. கால்களில் எந்த பாதிப்பும் இல்லை. அதனால் கழுத்து தண்டில் பாதிப்பு இருக்கலாம் என்று எண்ணி எம்ஆர்ஐ ஸ்கேன் எடுக்க கூறியிருந்தேன். 24.06.2015 அன்று நான் பார்த்தபோது அவர் அதே நிலையில்தான் இருந்தார். எம்ஆர்ஐ ஸ்கேன் எடுக்கப்படவில்லை. 25.06.2015 அன்று பார்த்தபோது அவருடைய நரம்பியல் சம்பந்தப்பட்ட எம்ஆர்ஐ ஸ்கேனில் தண்டுவடத்தில் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. எம்ஆர்ஐ ஸ்கேனில் எந்த வித தண்டுவட பாதிப்பும் இல்லை என்பதால் அது பிரேகியல் பிளக்ஸஸ் பாதிப்பு என்று கருதி அவரை சென்னை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைத்தேன்.

பின்னிட்டு பொது மருத்துவர் அவரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பியிருப்பார். அதற்கான குறிப்பை நான் அ.த.சா.ஆ.52-ல் எழுதினேன். அதில் 23.06.2015 மற்றும் 24.06.2015 மற்றம் 25.06.2015-ல் என்னுடைய கையெழுத்து உள்ளது. அ.த.சா.ஆ.51 ல் 25.06.2015 அன்று நான் ஒரு குறிப்பு எழுதினேன்.

அந்த நோயாளியை மேல் சிகிச்சைக்காக சென்னை அனுப்புவதற்கு நான் எழுதினேன். நோயளியை நான் பார்த்தபோது அவரின் இரண்டு கைகளையும் தலைக்கு மேல் அவரால் தூக்க முடியவில்லை. அவரது தோள்கள் செயல்படவில்லை. சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சியின் குறுக்கு விசாரணை 1ம் எதிரியின் வழக்கறிஞர் வருவதற்கு சற்று காலதாமதம் ஆவதால் ஒத்திவைக்கப்படுகிறது.

நேரம் மாலை 03.15 மணி

விசாரணை தொடங்கிய நேரம் மாலை 04.12 மணி

**1 வது எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை சிபிசிஐடி போலீசார் விசாரிக்கும்போது மருத்துவமனையில் இருக்கும் அசல் ஆவணங்களை பார்த்துதான் வாக்குமூலம் அளித்தேன். 24.06.2015 அன்று நான் நரம்பியல் அறுவை சிகிச்சை துறையில் பணியாற்றினேன். நோயாளியை நரம்பியல் துறைக்கு Case sheet–ஐ அனுப்பி பரிந்துரைத்தார்கள்.

நோயாளியை எங்களுக்கு பரிந்துரைத்தார்களா என்று Case sheet–ல் உள்ளதா என்றால் அ.த.சா.ஆ.52–ல் அவ்வாறு இல்லை. நரம்பியல் மருத்துவரின் கருத்துரு கேட்டார்கள் நான் அதை அளித்தேன். Case sheet எங்களுக்கு வருமா என்றால் வராது. நாங்கள் வார்டுக்கு செல்வோம். தற்போது 10 வருடங்கள் ஆகிவிட்டதால் அது பற்றி ஞாபகமில்லை.

அ.த.சா.ஆ.52 Case sheet–ன் தொடக்கமா அல்லது பாதியிலிருந்து இருக்கிறதா என்றால் பாதியிலிருந்து இருக்கிறது.

23.06.2015 அன்று நான் நோயாளியை பார்த்தேன். முன்னாளான 22.06.2015 அன்று நோயாளிக்கு என்ன சிகிச்சை அளித்தார்கள் என்று எனக்கு தெரியாது. அ.த.சா.ஆ.52–ல் Case sheet–ல் "refer to neuro surgeon" என்று இருக்கிறதா என்றால் அவ்வாறு இல்லை. எனவே அதில் இல்லை.

ஒரு Printed form–ல் உள்ள Case sheet–ல் எழுதும்போது உரிய பகுதியில் எழுதுவோமா என்றால் மேலிருந்தே எழுவோம் காரணம் ஒவ்வொரு மருத்துவரும் அதே தாளில் எழுத வேண்டும் என்பதால் முடிந்தவரை பக்கங்களை அதிகப்படுத்தாமல் அதே பக்கத்தில் எழுதுவோம். அ.த.சா.ஆ.52 நோயாளியின் எத்தனாவது பக்க Case sheet என்றால் அது பற்றிய குறிப்பு அதில் இல்லை.

அ.த.சா.ஆ.52 அசல் ஆவணம் இல்லை. ஒளிநகல் ஆவணம். கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் 3 வது வரியில் நோயாளி போலீசாரால் தாக்கப்பட்டதாக சொன்னேனா என்றால் எனக்கு நினைவில்லை. என்னை கேட்டுதான் எழுதினார்கள். நான் சொல்லியிருந்தால்தான் எழுதியிருப்பார்கள் என்றால் சரிதான். அ.த.சா.ஆ. 52 Case sheet–ல் நோயாளியை போலீசார் தாக்கியதாக என்று உள்ளதா என்றால் இல்லை.

Case sheet–ல் இல்லாததை போலீசார் விசாரணையில் எப்படி சொல்ல முடியும் என்றால் நோயாளியின் மொத்த Case sheet வைத்துதான் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தேன்.

முதலில் எழுதப்பட்ட Alleged history of injury என்று எழுதிய பின்னர் ஒவ்வொரு முறையும் மற்ற மருத்துவர் நோயாளியை பரிசோதித்த பின்னர் அதை நாங்கள் கொடுக்க மாட்டோம். 24.06.2015 அன்று அந்த அ.த.சா.ஆ.52 ல் மருத்துவர் குறிப்பு எழுதியுள்ளளார். அந்த மருத்துவரால் Assault என்று எழுதியிருக்கிறாரா என்றால் இல்லை.

போலீசார் கேட்டுக்கொண்டதால் Assault எழுதியுள்ளது என்றால் சரியல்ல. நோயாளியை போலீசார் அடித்ததாக சொன்னதை அ.த.சா.ஆ.52–ல் நான் குறித்தேனா என்றால் இல்லை. அதில் அடித்ததாக வரலாறு என்று நோயாளி கூறினார் அதை நான் குறித்தேன். அவ்வாறு நான் கு.வி.மு.ச. பிரிவு 161 ல் நான் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

அ.த.சா.ஆ.52 ல் உள்ள தகவல்கள் என்னுடைய கையெழுத்து இல்லை என்றால் மருத்துவ மாணவர்கள் நான் சொ்லகின்ற குறிப்புகளை எழுதுவார்கள் அதை நான் சரிபார்த்து எழுதுவேன். அதில் உள்ள விஷயங்களில் பாதி என்னுடைய கையெழுத்து இல்லை. மீதி பாதி என்னுடைய கையெழுத்து.

அ.த.சா.ஆ.52 ல் Cervical Spine என்று எழுதியது நான் எழுதவில்லை. அது என்னுடைய மாணவர் எழுதியது. Cervical Spine க்கு முன்பு சில வார்த்தைகள் உள்ளன. அந்த வார்த்தைகள் இந்த ஒளிநகலில் விழவில்லை.

அ.த.சா.ஆ. 52—ல் நான் நோயாளியின் எந்தெந்த ஆவணத்தை பார்த்தேன் என்று எழுதியிருக்கிறேனா என்றால் நான் பார்த்த ஆவணத்தை கொடுக்கவில்லை அதில் மருததுவம் பார்த்தேன் என்று குறிப்பிடவில்லை. சிடி Cervical Spine ஐ பார்த்தேன் என்று குறித்துள்ளேன். அதில் சிடி என்ற வார்த்தை இல்லை என்றால் சரிதான்.

அதில் நான் எம்ஆர்ஐ ஸ்கேன், எக்ஸ்ரே, ரேடியாலஜி ரிபோர்ட் மற்றும் பிற மருத்துவ ஆவணங்களை பார்த்தேனா என்று எழுதியிருக்கிறேனா என்றால் இல்லை. அ.த.சா.ஆ.52 ல் Attest செய்தவர் அசல் ஆவணங்களை பார்த்தாற்போல் குறிப்பு எதுவும் இல்லை. அ.த.சா.ஆ.52 ல் முதல் பக்கத்தில் வேறு சில குறிப்புகள் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது.

அ.த.சா.ஆ.52 ல் 23.066.2015 என்ற தேதியில் அடித்தல் திருத்தல் உள்ளதா என்றால் Over writing உள்ளது. 24.06.2015 என்று நான் எழுதவில்லை, என்னுடைய மாணவர்கள் எழுதினார்கள். அதே தேதியில் நான் எழுதியதற்கு மேலே யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. அதற்கு மேலே எழுதியவர்கள் 8 மணி என்று போட்டிருக்கிறார். நான் எழுதியதில் நேரம் போடவில்லை.

24.06.2015 அன்று 8 மணிக்கு எழுதிய மருத்துவர் நோயாளியை refer to neuro surgion என்று எழுதவில்லை. நான்

எழுதியதற்கு வடக்கு பக்கத்தில் என்னுடைய மாணவர்கள் எழுதினார்கள். எந்த மாணவர் என்றால் அவரின் பெயர் தெரியாது. To be reviewed என்று யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. ரம்யா என்று நான் கையொப்பம் போட்ட இடத்தில் நான் தேதியை குறிக்கவில்லை.

25.06.2015–ல் நான் நோயாளியை பார்த்ததற்கான ஆவணம் அ.த.சா.ஆ.51–ல் உள்ளது. அ.த.சா.ஆ.51ல் தேதி 25.06 என்று எழுதியுள்ளது. அந்த இடத்தில் Plan என்ற இடத்தில் அடிக்கவில்லை அது ஸ்லேஸ் மார்க் போல் உள்ளது. நான் ஏஆர்–ஐ பார்த்தாக போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. என்னுடைய ஆய்வுப்படி நோயாளிக்கு ஏற்பட்டது Clinical diagnosis என்று சொல்லுவோம். ஆனால் அந்த காயத்தை உறுதிபடுத்தவில்லை.

எம்ஆர்ஐ ஸ்கேன் எடுக்கப்பட்டது. 25ம் தேதி நான் நோயாளியை பார்த்து எம்ஆர்ஐ verified என்று எழுதவில்லை. Seen என்றும் எழுதவில்லை. Findings எழுதியிருக்கிறேன். Findings என்ற வார்த்தையை எழுதவில்லை. எம்ஆர் ஐ என்றைக்கு எடுத்தார்கள் என்ற எனக்கு தெரியாது. ஆனால் எம்ஆர்ஐ 25.06.2015 அன்று எடுத்தார்கள். எம்ஆர்ஐ டேக்கன் என்ற வார்த்தையை எழுதவில்லை.

எம்ஆர்ஐ. C spine என்று நான் எழுதவில்லை. No cord or root compression என்று நான் எழுதினேன். Will need to be referred to a higher centre என்று நான் எழுதவில்லை. எம்ஆர்ஐ எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அசல் ஆவணங்கள் 6 வருடங்கள் வரைதான் வைத்திருப்பார்கள். பின்னர் அழித்துவிடுவார்கள்.

எம்ஆர்ஐ எடுத்திருந்தால் அதை போலீசாரிடம் கொடுத்திருப்போம் என்றாலும் அதை கொடுக்காததால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.52ல் முதல் பக்கம் நேரடியாக இல்லை பிரிண்ட் தவறாக உள்ளது என்றால் சரியல்ல.

Medico Legal படி ஒரு நோயாளியின் குற்றவியல் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும்போது அவர் தொடர்பான அசல் ஆவணங்களை அந்த வழக்கு முடியும் வரை அழிக்கக்கூடாது என்றால் சரிதான். அசல் ஆவணங்களை அழிப்பதற்கான பதிவு உள்ளதா என்றால் தெரியாது.

அசல் ஆவணங்களை கொடுத்திருந்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதை மறைப்பதற்காக சில தகவல்களை மறைத்து நகல் ஆவணங்களை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

அ.த.சா.ஆ.51 மற்றும் 52 இரண்டும் உண்மை ஆவணங்கள் இல்லை ஒளிநகல் ஆவணங்கள் அதனால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1 ம் எதிரியின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.

**5 மற்றும் 6 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1 ம் எதிரியின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார். மீண்டும் தொடர் குறுக்கு விசாரணை

எம்ஆர்ஜ சர்வைகல் ஸ்பைன் எடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று முதல் விசாரணையில் கூறியிருக்கிறேன். அவரது எம்ஆர்ஜ சர்வைகல் ஸ்பைன் முடிவில் எந்தவித எலும்பு முறிவும் இல்லை என்று சொல்லியுள்ளேன். எம்ஆரை-ஐ பார்த்துதான் அவ்வாறு சொ்லிருக்கிறேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் தவறு. எம்ஆர்ஜ-ஐ பார்த்துதான் வாக்குமூலம் கொடுத்தேன்.

நரம்பியல் துறைக்கு வரும்போது அந்த நோயாளியின் Case sheet ஐ நாங்கள் பராமரிப்போம். அந்த நோயாளியை நாங்கள் எங்கள் துறையில் பார்க்கவில்லை. அ.த.சா.ஆ.52 ல் நோயாளியை நரம்பியல் துறைக்கு பரிந்துரைத்தாக குறிப்பு இல்லை. அ.த.சா.ஆ.52 ஆவணத்தை பணி மருத்துவர் பராமரித்தார். நாங்கள் பார்வையிட்டோம். அ.த.சா.ஆ.52 ல் யார் attest போட்டார்கள் என்று எனக்கு தெரியாது.

அ.த.சா.ஆ.52 ல் என் முன்னிலையில் attest செய்யவில்லை. Attest செய்தவர் யார் என்று எனக்கு தெரியாது. எனவே அந்த ஆவணத்தை குறித்து நான் சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரியல்ல. நோயாளியின் முந்தைய ஆவணங்களை பார்த்துதான் நான் சிகிச்சை அளித்தேன். 23 ம் தேதிக்கு முந்தைய ஆவணங்களை பார்த்து தான் நான் என்னுடைய கருத்துக்களை வழங்கினேன். Myelopathy (தண்டுவட பாதிப்பு) என்பது சிடிஸ்கேனில் ஓரளவுக்கு தெரியும், எம்ஆர்ஐ-ல் முழுமையாக தெரியும்.

விபத்து சிகிச்சை பிரிவில் நோயாளி உள்நோயாளியாக இருந்தாரா என்றால் கேசுவாலிட்டி பிரிவில் முதலில் சேர்த்து பின்னர் டுரோமா பிரிவுக்கு மாற்றுவார்கள். நோயாளியை சென்னை இராஜிவ் காந்திமருத்துவமனைக்கு நான் பரிந்துரைத்தேன். நான் சொல்லிதான் 108 ஆம்புலன்ஸில் நோயாளியை அனுப்பினார்கள்.

உதவி பேராசிரியர் ஆன நான் Patient care, treatment and research போன்ற பிரதான வேலை என்னுடையது. பணி மருத்துவர்தான் நோயாளியை டிஸ்சார்ஜ் செய்பவர் அல்லது மேல் சிகிச்சைக்கு அனுப்புவார். General Surgery பிரிவில் நோயாளி இருந்தால் அந்த பிரிவு சம்பந்தப்பட்ட மருத்துவர்தான் மேல் சிகிச்சைக்கு அனுப்புவார்.

நரம்பியல் பிரிவில் இருந்தால் எங்கள் பிரிவு மருத்துவர் நோயாளியை மேல் சிகிச்சைக்கு அனுப்புவார் என்றால் சரிதான். ஸ்கேன் ரிபோர்ட்டையோ எம்ஆர்ஐ ஸ்கேனையோ நான் சிபிசிஐடி போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை. அனைத்து ஆவணங்களையும் போலீசார் கேட்டுக்கொண்டதின் பெயரில் தயாரித்தோம் என்றால்

**சரியல்ல. பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல**. Based on the reference **என்று அதில் கூறியுள்ளேன்**. **சிபிசிஐடி போலீசாரின் அழுத்தத்திற்கு பயந்து அவர் சொல்லி கொடுத்ததை பொய் சாட்சியாக கொடுக்கிறேன் என்றால் சரியல்ல**

**மறுவிசாரணை இல்லை.**

**விசாரணை முடிவடைந்த நேரம் மாலை** 05.40 **மணி.**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.06 10:34:46 +0530